# உங்கள் உரிமைகள் பற்றிய விளக்கம்

நீங்கள் கைது செய்யப்படாமல்
ஒரு சந்தேகக் குற்றவாளியாக
விசாரிக்கப் படுவதாக இருந்தால்



## 1. விசாரணையின் போது ஒரு வழக்கறிஞருடன் ரகசியமாகக் கலந்தாலோசிப்பதற்கும் சட்ட உதவி பெறுவதற்குமான உரிமை

A. எப்பொழுது?

- விசாரணைக்கு முன் ஒரு வழக்கறிஞருடன் ரகசியமாகக் கலந்தாலோசிப்பதற்கும், விசாரணையின் போது சட்ட உதவி பெறுவதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு.
- உங்கள் மீதான விசாரணை தொடர்பான குற்றங்கள், சிறைத் தண்டனையால் தண்டிக்கப்படக் கூடியதாக இருக்கும் பொழுது, C. ன்கீழ் கொடுக்கப்பட்ட நடைமுறை பொருந்தும்,

B. எந்த வழக்கறிஞர்?

- உங்கள் விருப்பப்படி எந்த ஒரு வழக்கறிஞரையும் நீங்கள் கலந்தாலோசிக்கலாம்.
- குறிப்பிட்ட சட்ட நிபந்தனைகளின்படி சட்ட உதவி அமைப்பின் கீழ் நீங்கள் ஒரு வழக்கறிஞரை அமர்த்தலாம். அது முற்றிலும் கட்டணமில்லாத அல்லது ஒரு பகுதி கட்டணத்துடன் கூடிய சேவை ஆகும். சட்ட உதவிக்கான நிபந்தனைகளை உள்ளடக்கிய படிவத்தை நீங்கள் கேட்டுப் பெறலாம். பின்னர் ஒரு வழக்கறிஞரை நியமிக்குமாறு பார் அசோசியேஷனின் சட்ட உதவி அலுவலகத்தை நீங்கள் அணுகலாம்.

C. ரகசிய ஆலோசனை எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது?

1 முதல் 4 வரை உள்ள எண்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளைப் பட்டியலிட்டு, விசாரணையில் கலந்து கொள்வதற்கு முன் ஒரு வழக்கறிஞரை நீங்கள் கலந்தாலோசிக்க உத்தேசித்திருப்பதைக் கூறி ஒரு எழுத்துப்பூர்வமான வேண்டுகோளை நீங்கள் அனுப்பி இருந்தால்:

- ஒரு வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க ஏற்கனவே நீங்கள் வாய்ப்பைப் பெற்றிருப்பதால், ஒத்தி வைத்தல் உங்களுக்கு வழங்கப்படக் கூடாது.
- ஒரு வழக்கறிஞரின் உதவியை நீங்கள் கோராதிருந்தால், விசாரணை துவங்குவதற்கு முன் நீங்கள் எதுவும் பேசாமல் அமைதியாக இருப்பதற்கான உங்கள் உரிமைகளைப் பற்றி உங்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும். (3 ஆம் விடயத்தைப் பார்க்கவும்)

ஒரு எழுத்துப்பூர்வமான வேண்டுகோளை நீங்கள் அனுப்பாமல் இருந்தால் அல்லது முழுமையடையாத ஒரு எழுத்துப்பூர்வமான வேண்டுகோளை நீங்கள் அனுப்பி இருந்தால்:

- உங்கள் வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க ஏதுவாக விசாரணையை பிறகு வேறொரு நாளில் அல்லது நேரத்தில் ஒத்தி வைக்க ஒரு முறை மட்டும் நீங்கள் கோரலாம்.
- விசாரணை துவங்கிய பிறகு உங்கள் வழக்கறிஞருடன் தொலைப்பேசியில் பேச உங்களுக்கு உரிமை உண்டு.
- விசாரணை மேற்கொள்ளப்படும் இடத்தில் உங்கள் வழக்கறிஞரின் வருகைக்காக நீங்கள் காத்திருக்கலாம்.

D. விசாரணைகளின் போது சட்ட உதவி

உங்கள் வழக்கறிஞர் உறுதிப்படுத்த வேண்டியவை:

- பதில் அளிக்காமல் அமைதியாக இருப்பதற்கான உங்கள் உரிமைகள் மற்றும் உங்கள் மீது குற்றம் சுமத்தாமல் இருக்கக்கூடிய உங்கள் உரிமைகள் ஆதரவு அளிக்கின்றனவா;
- விசாரணையின் பொழுது நீங்கள் நடத்தப்படும் முறையில் ஏதேனும் தகாத நெருக்கடி தரப்படுகிறதா;
- உங்கள் உரிமைகள் பற்றி உங்களுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளதா என்னும் உண்மை நிலை மற்றும் விசாரணை முறை.

இந்த விசயங்களில் ஏதேனும் பற்றி உங்கள் வழக்கறிஞருக்கு கருத்துகள் இருந்தால், அவற்றை உடனடியாக காவல்துறை விசாரணை அறிக்கையில் பதிவு செய்து பெற்றுக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட விசாரணை மேற்கொள்ளப்படுவதற்கு அல்லது ஒரு குறிப்பிட்ட நபரிடம் விசாரணை செய்யப்படுவதற்கு உங்கள் வழக்கறிஞர் கோரலாம். கேட்கப்பட இருக்கும் கேள்விகள் பற்றிய விளக்கங்களையும் அவர் கோரலாம். அவர் புலனாய்வு மற்றும் விசாரணை பற்றிய கருத்துகளையும் முன்வைக்கலாம். உங்களுக்காக அவர் பதில் அளிக்கவும் அல்லது விசாரணையைத் தடை செய்யவும் அவருக்கு அனுமதியில்லை.

# உங்கள் உரிமைகள் பற்றிய விளக்கம்

நீங்கள் கைது செய்யப்படாமல்
ஒரு சந்தேகக் குற்றவாளியாக
விசாரிக்கப் படுவதாக இருந்தால்



E. இந்த உரிமைகள் கைவிடப்பட வேண்டுமா?

ஒரு வழக்கறிஞருடன் கலந்துரையாடுவதற்கான அல்லது ஒரு வழக்கறிஞரின் உதவியைப் பெறுவதற்கான வேண்டுகோளுக்கு உங்களுக்கு எவ்விதமான நிர்ப்பந்தமும் இல்லை.

நீங்கள் பின்வரும் நிலைகளில் தன்னிசைவின் அடிப்படையிலும் தீவிர முடிவுக்குப் பிறகும் இந்த உரிமையைக் கைவிடலாம்:

- சட்டரீதியான வயதை அடைந்தவராக இருந்தால்;
- இந்த நடைமுறைக்கான ஆவணத்தில் கையெழுத்திட்டு தேதியிடப்பட்ட பிறகு.

## 2. குற்றங்களின் சுருக்கமான அறிவிப்புகள்

- விசாரணை மேற்கொள்ளப்படும் குற்றங்கள் பற்றி சுருக்கமாக உங்களுக்குக் கூறப்பட வேண்டிய உரிமை உங்களுக்கு உள்ளது

## 3. பதில் கூறாமல் அமைதியாக இருக்கும் உரிமை

- எந்த நிலையிலும் உங்கள் மீது வலுக்கட்டாயமாகக் குற்றம் சுமத்த முடியாது.
- உங்கள் அடையாளத்தை நீங்கள் தெரிவித்த பிறகு, அறிக்கை தரலாம், கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கலாம் அல்லது பதில் எதுவும் கூறாமல் அமைதியாக இருக்கலாம்.

## 4. விசாரணையின் பொழுது பிற உரிமைகள்

பல அறிவிப்புகளுக்களுடன் விசாரணை துவங்கும். குற்றங்கள் பற்றிய சுருக்கஅறிவிப்புகளுக்களை திரும்பக் கூறுமாறு கோருதல், நீங்கள் பதில் அளிக்காமல் அமைதயாக இருத்தல் என்பவற்றுக்கான உங்கள் உரிமைகளுக்கு மேலதிகமாகபின்வருபவை உங்களுக்கு அறிவிக்கப்படும்:

- உங்களிடம் கேட்கப்படும் அனைத்துக் கேள்விகளையும் நீங்கள் அளித்த அனைத்துப் பதில்களையும் உங்களால் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளால் பதிவு செய்து தருமாறு நீங்கள் கோரலாம்;
- குறிப்பிட்ட விசாரணை மேற்கொள்ளப்படவும் குறிப்பிட்ட நபரிடம் விசாரணை மேற்கொள்ளப்படவும் நீங்கள் கோரலாம்.;
- தயாரிக்கப்பட்ட உங்கள் அறிக்கைகள் நீதிமன்றத்தில் சான்றாதாரமாகப் பயன்படுத்தப்படும்.
- நீங்கள் கைது செய்யப்படவில்லை, உங்கள் விருப்பம் போல எந்த நேரத்திலும் சுதந்திரமாக உலவ முடியும்.
- ஒரு விளைவாக விசாரணையைக் காலம் தாழ்த்தக் காரணமாக அமையும் வரை, உங்கள் பொறுப்பில் உள்ள ஆவணங்களை விசாரணையின் பொழுது நீங்கள் பயன்படுத்தலாம். விசாரணையின் பொழுது அல்லது அதற்குப் பிறகு, இந்த ஆவணங்களை காவல்துறை விசாரணை அறிக்கையில் இணைக்குமாறு அல்லது நீதிமன்ற ஆவணப் பதிவகத்தில் பாதுகாத்து வைக்குமாறு நீங்கள் கோரலாம்.

## 5. விசாரணை முடிவில்

விசாரணை முடிவில், விசாரணையின் எழுத்துப் பிரதி உங்களுக்கு வாசிப்பதற்காகத் தரப்படும். அதை உங்களுக்கு வாசித்துக் காட்டுமாறும் நீங்கள் கோரலாம்.

உங்கள் அறிக்கையில் ஏதேனும் மாற்றம் செய்யவோ அல்லது சேர்க்கவோ நீங்கள் விரும்புகிறீர்களா என உங்களிடம் கேட்கப்படும்.

## 6. மொழிபெயர்ப்பாளர் உதவி மற்றும் மொழிபெயர்ப்பதற்கான உரிமை

- உங்களால் அந்த மொழியைப் புரிந்து கொள்ளவோ அல்லது பேசவோ முடியவில்லை என்றால், அல்லது உங்களுக்குக் காது கேட்கும் திறன் அல்லது பேச்சுத் திறன் குறைபாடு இருந்தால், விசாரணையின் பொழுது உறுதிமொழி ஏற்ற ஒரு மொழிபெயர்ப்பாளர் உங்களுக்கு உதவுவதற்காக நியமிக்கப்படுவார். இந்த உதவி கட்டணமில்லாதது.
- உங்கள் அறிக்கையை உங்கள் சொந்த மொழியில் எழுத நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவீர்கள்.
- விசாரணை நடவடிக்கைகளின் மொழியை உங்களால் புரிந்து கொள்ள முடியாவிட்டால், கைது ஆணை, சம்மன் மற்றும் நீதிமன்ற தீர்ப்பின் தொடர்புடைய பக்கங்களை நீங்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் மொழிபெயர்ப்பைப் பெற உங்களுக்கு உரிமை உண்டு. இந்த உதவி இலவசம்.

**உங்கள் உரிமைகள் பற்றிய இந்த விளக்க ஆவணத்தை பாதுகாப்பாக வைத்திருக்கவும்.**